# DEPOSITION OF WITNESS

IN THE COURT OF SUB JUDGE, NANGUNERI.

OS.157 of 2021

Civil Case No :: Pw - 2

Name :: முத்து லெட்சுமி

Husband's Name :: துரை முருகன்

Village :

Taluk ::

Calling ::

Age ::

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 in the day 11.07.2025.

**முதல் விசாரணை**

நான் நீதிமன்றத்தில் இருந்து வந்த அழைபப்பாணையின் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். நான் நான்குநேரி தாலுகாவில் மண்டல துணை வட்டாட்சியராக பணிபுரிந்து வருகிறேன். ஆழ்வாநேரி கிராமம் சர்வே எண்.383/6 பற்றி அழைப்பாணையில் சொல்லப்பட்டுள்ளது. சர்வே எண்.383/6 ன் மொத்த விஸ்தீரணம் 95 ஏர்ஸ் ஆகும். (2 ஏக்கர் 34 செண்டு ஆகும்). சர்வே எண்.383/6 ன் பட்டா எண்.1241 என்பதாகும். சர்வே எண்.383/6 ல் 3 சப்டிவிசன் உள்ளது. அது 383/6A, 383/6B, 383/6C ஆகும். சர்வே எண்383/6A ன் பட்டா சிட்டா UDR க்கு பின்பு யார் பெயரில் இருந்தது என்றால் பாக்கிய முத்து , தேவ இரக்கம் என்பவர்களது பெயரில் கூட்டுப்பட்டாவாக இருந்தது. சர்வே எண்383/6A ன் பட்டா UDR க்கு முன்பு பெரியசாமி என்பவர் பெயரில் இருந்தது. UDR க்கு முன்பு உள்ள சிட்டாவை தாக்கல் செய்கிறேன். அது சா.சா.ஆ-1 ஆகும். UDR க்கு முன்பு உள்ள அடங்கலை தாக்கல் செய்கிறேன். அது சா.சா.ஆ-2 ஆகும். மேற்படி சர்வே எண்ணில் UDR க்கு பின்பு

உள்ள அ பதிவேடு சா.சா.ஆ-3 ஆகும். மேற்படி சர்வே எண்ணில் UDR க்கு பின்பு உள்ள 10 (1) சிட்டா சா.சா.ஆ-4 ஆகும். மேற்படி சர்வே எண்ணில் அடங்கல் சா.சா.ஆ-5 ஆகும். மேற்படி சர்வே எண்ணின் புல வரைபடம் UDR பின்பு உள்ளது சா.சா.ஆ.6 ஆகும். 04.01.2019 ம் தேதியிட்ட மண்டல துணை வட்டாட்சியரின் உத்தரவு சா.சா.ஆ.7 ஆகும். 17.02.2023 ம் தேதியிட்ட நான்குநேரி மண்டல துணை வட்டாட்சியர் உத்தரவுக்கு எதிரான சார் ஆட்சியர் உத்தரவின் நகல் சா.சா.ஆ.8 ஆகும். இன்றைய நிலவரப்படி ஏற்கெனவே கூட்டுப்பட்டாவில் சேர்க்கப்பட்ட நபர்களை நீக்குவதற்கு உத்தரவு போடப்பட்டுள்ளது. ஆனால் நீக்கம் செய்யப்படவில்லை.

<u>குறுக்கு விசாரணை</u>

சா.சா.ஆ-1 தற்போது நடைமுறையில் இல்லை என்றால் சரிதான். சா.சா.ஆ-2 தற்போது நடைமுறையில் இல்லை. சா.சா.ஆ-3 ஆவணம் எந்த வருடம் உருவாக்கப்பட்டது என்றால் எனக்கு தெரியவில்லை. சா.சா.ஆ-3 அ பதிவேடில் உள்ளது போல் பட்டா இருக்கிறதா அல்லது மாறிவிட்டதா என்றால் பட்டா மாறிவிட்டது. பட்டா மாறியதற்கான உத்தரவு நான் கொண்டு வரவில்லை என்றால் நான் கொண்டு வந்துள்ளேன். சா.சா.ஆ-4 எப்போது பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் அடிப்படையில் பிறப்பிக்கப்பட்டது என்றால் 2019 ல் பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் அடிப்படையில் தயார் செய்யப்பட்டது. சா.சா.ஆ-7 ன் உத்தரவின் மீது மாவட்ட வருவாய் அலுவலர் திருநெல்வேலியில் நடைபெற்ற சீராய்வு மனுவில் இந்த வழக்கில் பிறப்பிக்கப்படும் தீர்ப்பின் அடிப்படையில் பட்டா பெயர் மாற்றத்தை முடிவு செய்து கொள்ளலாம் என்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படுவது அந்த உத்தரவுதான். அந்த 03.06.2024 ம் தேதியிட்ட உத்தரவு **சா.சா.ஆ-9** ஆகும். பட்டா பெயர் மாற்றம் இந்த நீதிமன்றத்தில் பிறப்பிக்கப்படும் உத்தரவின் அடிப்படையில்தான் முடிவு செய்யப்படும் என்றால் சரிதான்.